# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற அவசரக் கூட்டம்

**2019ஆம் ஆண்டு ஜீலை மாதம் 16ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 05.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 16.07.2019**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

## பொருள் எண். 1

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கூட்டுஸ்தாபனம் வரையறுக்கப்பட்ட (டுஃபிட்கோ) திட்டம் 2018 – 19ன் கீழ் 9000 எண்ணிக்கை புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்குதல் 03.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தேர்வு பெற்றதையடுத்து அவற்றின் விலை உறைகள் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கு செய்ததில் அதன் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் / முகவரி** | **ஒப்பந்தத் தொகை (GST 12%)சேர்த்து** | **ஒப்பந்த விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | M/s. V.B.அசோசியேட்ஸ்,<br>எண்.12, 1வது பிரதான சாலை,<br>நங்கநல்லூர், சென்னை–61 | 3,20,06,240.00 | 4.88 % மதிப்பீட்டை விட அதிகம் (L1) |
| 2 | திரு.P.விஜயரகுநாதன்,<br>ஏண்.13எ, சேலை ராமசாமி தெரு,<br>பிள்ளையார் பாளையம்,<br>காஞ்சிபுரம் – 631501. | 3,35,44,000.00 | 9.92 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. V.B.அசோசியேட்ஸ் (மதிப்பீட்டை விட 4.88 % அதிகம்) L1 நிறுவனத்தாருக்கு இந்நகராட்சி மூலம் விலை குறைப்பு செய்துதர கோரப்பட்டது.

அதன்படி M/s.V.B.அசோசியேட்ஸ் நிறுவனம் அவர்கள் தற்போது பணியில் பயன்படுத்தப்படும் பொருட்களின் விலை மற்றும் ஆட்கள் கூலி போன்றவை சந்தையில் கூடுதலாக உள்ளதால் தம்மால் விலைக்குறைப்பு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளார்கள்.

இந்நகராட்சி பகுதிகளில் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களின் (ஆழ்துளை குழாய் கிணறுகள்) மூலம் மட்டுமே வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளது. அதன்படி, குடியிருப்புகளுக்கு முறையே இணைப்புகள் மூலம் குடிநீர் வழங்கும்போது பொது குழாய்கள் முலம் குடிநீர் வழங்குவது நிறுத்தப்படுவதுடன் நகராட்சியின் வருவாய் அதிகரிக்கும் அரசின் மிக முக்கியமான திட்டப்பணியாக உள்ளதாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளது.

அதன்படி, மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.B.அசோசியேட்ஸ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படியும், நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டு மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.3,20,06,240/- உடன் (4.88% மதிப்பீட்டைவிட கூடுதல்) GST தொகை 12% சேர்த்து இப்பணிக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொழிலாளர்

நலநிதி 1% ரூ.3,11,000/- மற்றும் இதர எதிர்பாராத இனங்களுக்காக மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.2,72,920/- ஆகியவற்றையும் சேர்த்து மொத்தம் ரூ.3,25,90,160/-ற்கு (325.90 இலட்சம்) பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட ரூ.311.00 இலட்சத்திற்கு கூடுதலாக ஆகும் செலவினம் ரூ.14,90,160/–ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.823** **நாள்.16.07.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 2

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளில் சாலைகள் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. அதன்படி பழுதடைந்த சாலைகளை செப்பனிட்டு சீர்செய்யவும் அதற்காக சிப்பங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 1,3, 5 & 6 | எஸ்(அன்)பி குடியிருப்பு பிரதான சாலை, கேலக்ஸி சாலை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல், கீசன் நகர் குறுக்கு தெரு, மெட்ரோ சிட்டி சாலை தார்தளம் அமைத்தல், பெரியார் நகர் 1வது தெரு, தேவதாஸ் தெரு, பிரதிஸ் தெரு, வி.ஜி.என் 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை, 5வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை 1வது குறுக்கு தெரு, 2வது குறுக்கு தெரு, பாஸ்கர் தெரு, 1வது தெரு, பெருமாள் தெரு, எஸ் (அன்) பி குடியிருப்பு, 2வது பிரதான சாலை, 9வது குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல் மற்றும் யாதவர் தெரு சிமெண்ட் தளம் அமைத்தல், செட்டி 3வது குறுக்கு தெரு, 4வது தெரு மற்றும் 6வது குறுக்கு தெரு பேவர் பிளாக் வசதி செய்தல் | 3.539 | 4.10 – 7.00 | 200.00 |
| 2. | II | 1,2,3,5, 9,14 &15 | சென்னை நியூ சிட்டி பகுதியில் தார்தளம் அமைத்தல், ஏ.ஆர் கிருஷ்ணமூர்த்தி சாலை, சங்கர் சீலிங் சாலை, சென்சூரியன் அவென்யூ பிரதான சாலை, அண்ணா தெரு, அக்ரஹாரம் பிரதான சாலை, அக்ரஹாரம் பெருமாள் கோயில் தெரு, காமாட்சிபுரம், கனகதுர்கா நகர், சக்திவேல் நகர் பிரதான சாலைகளுக்கு தார்தளம் புதுப்பித்தல் மற்றும் புளியம்பேடு குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைத்தல். | 4.065 | 4.10 – 6.00 | 200.00 |
| 3. | III | 8,9, 11 & 12 | புளியம்பேடு பிரதான சாலை, பல்லவன் நகர் 2வது பிரதான சாலையினை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல், சூசையா நகர் பூங்கா தெரு, குறுக்கு தெருவில் தார்தளம் அமைத்தல் மற்றும் சூசையா நகர் எம்.ஜி.ஆர் சாலை, குறுக்கு தெரு, கோ–ஆப்ரேடிவ் நகர் அறிஞர் அண்ணா கிழக்கு தெரு, அறிஞர் அண்ணா மேற்கு தெரு, மகாலட்சுமி நகர் பிரதான சாலை, குறுக்கு தெரு, சிவன் கோயில் தெரு, குறுக்கு தெரு மற்றும் பாலாஜி நகர் பகுதிகளுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 4.504 | 4.10 – 6.00 | 200.00 |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| **4.** | **IV** | 3,4,6,7, 8 & 12 | பல்லவன் நகர் 1வது பிரதான சாலை, கீழ்அயனம்பாக்கம் சுடுகாடு சாலை, வெள்ளாளர் தெருவில் தார்தளம் அமைத்தல் மற்றும் ராஜீவ் நகர் 1வது பிரதான சாலை, குறுக்கு தெரு, ஐ.சி.எல் காலனி, திருமலை பாலாஜி நகர் குறுக்கு தெருக்கள், பல்லவன் நகர் 1வது பிரதான சாலை மற்றும் சொக்கலிங்கம் நகர் பகுதிகளுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 3.840 | 4.10 – 6.00 | 200.00 |
| **5.** | **V** | 13,15, 17 & 18 | கீரின்பார்க், அருள் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் மற்றும் தேவி கருமாரியம்மன் நகர் 2வது தெரு, 4வது தெரு, 5வது தெரு, கே.பி.எஸ் நகர் 2வது தெரு, ஐயப்பா நகர் பிரதான சாலை, 1வது, 2வது தெரு, ஈஸ்வரன் நகர் 1வது, 3வது, 5வது, 5வது குறுக்கு தெருக்கள், கீரின் பார்க், எல்.கே.பி நகர், பாலாகிருஷ்ணா நகர் மற்றும் பருத்திப்பட்டு பிரதான சாலை பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல். | 4.361 | 4.10 – 6.50 | 200.00 |
| **6.** | **VI** | 15, 17 & 18 | ஜெயம் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் மற்றும் அன்னை அபிராமி நகர் பிரதான சாலை, உதவும் கரங்கள் பிரதான சாலை, அபிராமி நகர் 3வது தெரு, சுந்தர விநாயகர் நகர், சுந்தரசோழபுரம் சிவன் கோயில் ரோடு, சக்ரேஸ்வரர் நகர், ஜெயம் நகர், காவேரி நகர் பிரதான சாலை, கிருஷ்ணா நகர் பிரதான சாலை மற்றும் அபிராமி நகர் பகுதிகளுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 5.197 | 4.10 – 7.00 | 200.00 |
| | | | **மொத்தம்** | **25.506** | | **1200.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை ரூ.1200.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2019–20 ஆண்டின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.824 நாள்.16.07.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 3

2019 – 20ம் ஆண்டிற்கு திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சியின் ஆணையர் துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர் அலுவலர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் காஞ்சிபுரம் நகராட்சியில் உள்ள ஸ்ரீ அத்திவரதர் திருவிழா வைபவத்திற்கு மாற்று பணி மற்றும் சிறப்பு பணி மேற்கொள்ள சென்றதாலும் மற்றும் நிர்வாக காரணங்களாலும், நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் மக்காத குப்பைகள் மற்றும் கழிவுகள் சேகரம் செய்வதற்கு போரா கோணிப்பைகள் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆனதால் பொது சுகாதார பணி நிமித்தம் காரணமாக ஏற்கனவே இந்நகர் மன்றம் அனுமதி அளித்து பணிக்கப்பட்டு வரும் ஜெ.ஜெ. எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலை விகிதப்படி மேலும் இரண்டு மாத காலத்திற்கு வாங்கி உபயோக்கிதிடவும் இதற்கென ஆகும் செலவீனம் ரூ.7.50 இலட்சத்திற்கும், மற்றும் 01.09.2019 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் இதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.825** **நாள்.16.07.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 4</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி இயந்திர வாகன பதிவு எண்.TN 12 T 6859 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்திட தேவையான உதிரி பாகங்களை வாகன தயாரிப்பு நிறுவனமான M/s.Beml Limited., No.3, Sterlling Road, Nungambakkam, Chennai–34 நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய பெறப்பட்டுள்ள விலைப்புள்ளி தொகை ரூ.**56,528/–**ஐ பொது நிதியின் கீழ் வழங்கிடவும் பழுது நீக்க பணியினை மேற்படி நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்படி செலவினத்திற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பழுது நீக்க பணியினை மேற்படி நிறுவனத்தின் மூலம் தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.826** **நாள்.16.07.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**ஓம்/-தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/

**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**